Register No. | | | | | | | | |

**TA2C** **5765–23**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three-year Regular Course)

First Year – Second Semester

CONSTITUTIONAL LAW – I

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What are the essential features of a federal Constitution? In the light of decided cases and Constitutional provisions discuss, how far the Indian Constitution is federal in nature?

   கூட்டாட்சி அரசமைப்பின் இன்றியமையா கூறுகள் யாவை? இந்திய அரசமைப்பு எந்த அளவிற்கு கூட்டாட்சி தன்மையது என்பதை முன் தீர்ப்புகள் மற்றும் அரசமைப்பு சட்ட பிரிவுகளின் படி விவாதிக்க.

2. What do you understand by 'Law' and 'Law in force' under Article 13? Answer with supporting case laws.

   அரசமைப்பு சட்டத்தின் 13வது உறுப்பின் கீழ் 'சட்டம்' மற்றும் 'நடைமுறையிலுள்ள சட்டம்' இது குறித்து தாங்கள் புரிந்து கொண்ட கருத்து யாது? தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் பதிலளிக்கவும்.

3. Discuss the scope of fundamental freedom of profession, occupation, trade or business under the Constitution. What are the restrictions that can be imposed on this freedom?

   அரசமைப்புச் சட்டத்தின் கீழ் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் செய்யும் அடிப்படைச் சுதந்திரத்தை விளக்குக. எப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை அதன் மீது விதிக்க முடியும்?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Right to freedom of speech and expression is not without restriction" — Examine the statement with relevant cases.

   பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்தை வெளியிடுவதற்கான உரிமை கட்டுப்பாடற்ற ஒன்றல்ல, இக்கூற்றினை தொடர்புடைய வழக்குகள் கொண்டு ஆராய்க.

5. "The Indian Constitution is unique in protection of the minorities" — Discuss.

"சிறுபான்மையினரை பாதுகாப்பதில் இந்திய அரசமைப்புச் சட்டம் தனித் தன்மையுடன் செயல்படுகிறது" – விவாதிக்கவும்.

6. Examine the scope of Right to freedom of Religion.

சமய உரிமையின் அளாவுகையை விளக்கமாக தருக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Need for fundamental duties

அடிப்படை கடமைகளுக்கான தேவை

(b) Citizenship by Domicile

வசிப்பதன் மூலம் குடியுரிமை

(c) Right against exploitation.

சுரண்டலுக்கெதிரான உரிமை

(d) Protective discrimination.

பாதுகாக்கும் நோக்கில் வேறுபடுத்துதல்

(e) Mandal Commission case.

மண்டல் கமிஷன் வழக்கு

(f) Preventive detention.

தடுப்புக் காவல்

(g) Doctrine of Severability.

பிரிக்கத்தக்க கோட்பாடு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A state Electricity Board constituted under Electricity (Supply Act), 1948 had taken action against its employees. They approached the High court for certain remedies for violation of Fundamental Rights. It was contested by the Board that the Board is not "state" and hence not amenable to fundamental rights. Decide.

மின்சாரம் (விநியோக சட்டம்) 1948 இன் கீழ் அமைக்கப்பட்ட மாநில மின் வாரியம் அதனுடைய பணியாளர்கள் மீது சில நடவடிக்கைகளை எடுத்தது. அதனை எதிர்த்து மாநில உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டதாக அவர்கள் வழக்கு தொடுத்தனர். ஆனால் மின்வாரியமானது தான் 'அரசு' அல்ல ஆகையால் அடிப்படைய உரிமையின் கட்டுப்பாட்டிற்குள் வராது என எதிர்வாதம் செய்தது. தீர்மானிக்கவும்.



9. Without obtaining the consent of the particular state, parliament passed a law under Art. 3 bifurcating the state into two states. Discuss.

ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் சம்மதத்தை பெறாமலேயே அம்மாநிலத்தை இரண்டு மாநிலங்களாகப் பிரிக்க வகை செய்யும் சட்டத்தை பாராளுமன்றம் அரசமைப்பின் 3ஆம் பிரிவின் கீழ் இயற்றியது. இதன் தன்மையை விவாதி.

10. A Non-Brahmin was appointed by the government in a famous temple as pujari to perform pooja. This was challenged before the Supreme Court as he is not competent. Decide the Constitutional validity of the appointment.

பிராமணர் அல்லாத ஒருவர் புகழ்பெற்ற கோயில் ஒன்றில் வழிபாடு செய்திட நியமிக்கப்பட்டார். அவர் தகுதி அற்றவர் என உச்சநீதிமன்றத்தில் வழக்கிடப்பட்டது. இந்த நியமனத்தின் அரசமைப்பு செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.